# சைவ விழுமியங்கள்

## 03 ஆம் அத்தியாயம்



ஆசிரியர்-லோரன்ஸ் லோகேஷ்வரி
கே.தெஹி.நூரி தமிழ் வித்தியாலயம்

## விழுமியம் என்பது- சைவ சமயம் வலியுறுத்துகின்ற மேலான பண்பு ஆகும்.

ஆன்மா ஈடேற்றம் அடைவதற்கு சைவ நெறி பல விழுமிய பண்புகளை எடுத்தியம்புகின்றது.

மனிதன் குறித்த நெறி முறைகளை வாழ்கையில் கடைப்பிடித்தால் முத்தியின்பமாகிய பேரானந்தத்தை பெறுவான்.

## சைவ நெறி வலியுறுத்தும் விழுமியங்கள் சில...

- அன்புடைமை
- வாய்மை
- கடமை
- ஒழுக்கமுடைமை
- பிறரை மதித்தல்
- செய்நன்றி மறவாமை



# அன்புடைமை

*அன்புடைமை-நாம் பிற உயிர்களிடம் காட்டுகின்றன ஈடுபாடு அன்புடைமை ஆகும்.

*தன்னோடு தொடர்புடையவர்களிடம் மாத்திரம் அன்றி அல்லாதவர்களிடமும் அக்கறை காட்டுதல் வேண்டும்.

*அவ்வாறு காட்டப்படும் அன்பு அருள் எனப்படுகின்றது.அருள் என்பது அன்பின் முதிர்ச்சி எனலாம்.


# சைவம் வலியுறுத்தும் மனிதன் செய்யக்கூடாத பாவக் காரியங்கள்

- கொலை
- களவு
- புலாலுண்ணல்

உயிர்களிடத்தில் நாம் செலுத்தும் அன்புதான் இறைவன் என்ற பொருளில் திருமந்திரம் நூல் அன்பேசிவம் என்று கூறுகின்றது.



# சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை சீவகாருண்யத்தை வலியுறுத்தி நிற்கின்றது.



ஒருவரித்தில் அன்பு பாராட்டுவதற்கே இந்த உடல் எமக்கு கிடைத்தது என்கிறார் திருவள்ளுவர்.



*பிறரிடம் அன்பு காட்டுதலே உயர்ந்த தவம் என்கிறார் மஹாகவி சுப்ரமணிய பாரதியார்.*

**செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே, தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம் – வையத்தில் அன்பிற் சிறந்த தவம் இல்லை அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு.**

# வாய்மை

* உண்மை பேசுதல் வாய்மை எனப்படும்.

*வாயினால் வெளிப்படுவதால் “வாய்மை” எனப்படுகிறது.

யாருக்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதவற்றைப் பேசுவதே வாய்மை என்கிறார் திருவள்ளுவர்.



# பொய்மையும் சில நேரங்களில் வாய்மையே என்கிறார் திருவள்ளுவர்.



ஒருவர் உள்ளத்தால் தூய்மையாக இருக்கின்றாரா என்பதற்கு அவர் பேசும் வார்த்தைகளே சான்றாகின்றது. அவை உண்மையாக அமையும் போது அவர் அகத்தூய்மை அடைகின்றார். வள்ளுவர், பொய் பேசாதவன் உலகத்தாரால் மதிக்கப்படுவான் என்கிறார் திருவள்ளுவர்.





சத்தியம் வத (உண்மை பேசு)
உபநிடத மகா வாக்கியம்
வலியுறுத்துகின்றது.

நமது புராணம் கூறும் ஹரிச்சந்திர மகாராஜாவின் கதை உண்மை பேசியதால் இறையருளுக்கும் புகழுக்கும் பாத்திரமானவன் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.



நவீன யுகத்தில் ஹரிச்சந்திரன் எனப் போற்றப்பெறும் மஹாத்மா காந்தியடிகள் வாய்மை தவறாது வாழ்ந்தபப்படியாலேயே அஹிம்சை வழியை வெல்ல முடிந்தது.



# உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்







# இறைவன் அன்பே வடிவானவர்








சைவ நெறி வலியுறுத்தும் விழுமியப் பண்புகளை நாமும் கடைப்பிடித்து உத்தமராய் வாழ்வோம்.


நன்றி